சொல்லப்பட்டிருந்தாலும், இதை உறுதியாக தமிழ் நாட்டில் சேலத்திற்கு அருகே தான் ஆரம்பிக்கவேண்டும் என்று இந்த சர்க்கார் வற்புறுத்துவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆந்திர மாகாணத்தின் நடவடிக்கைகளைப்பற்றி இந்த சர்க்காருக்கு தகவல் கிடையாது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸார், தஸ்தூர் கம்பெனிக்கு அனுப்ப பட்டிருப்பது எந்த முறையில் தயாரிப்பது என்பதைப்பற்றி. இந்த ரிப்போர்ட் வந்ததும் சேலம் இரும்பையும் நெய்வேலி நிலக் கரியையும் கொண்டு தமிழ் நாட்டில் இரும்பு தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் உறுதியாக சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தஸ்தூர் கம்பெனி ரிப்போர்ட் வந்த பிறகு மத்திய சர்க்கார் தான் முடிவு எடுப்பார்கள். ராஜ்ய சர்க்கார் முடிவு எடுப்பது அல்ல.

ஊராட்சி மன்றங்களுக்கு கட்டிடம்

** 687* **கேள்வி—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியில் கூடிய சேர்மன்கள் மாநாட்டில் ஊராட்சி மன்றங்களுக்கு ஆபீஸ் கட்டிடம் கட்ட அரசாங்கம் ரூ. 3,500 கடனாகவும், ரூ. 3,500 மானியமாகவும் கொடுக்க கோரும் தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக அரசாங்கம் சில தொகைகளை ஒதுக்க வேண்டுமென்றும், அவைகளுக்குக் கட்டிடச் செலவில் பாதியை மானியமாகவும், பாதியை நீண்டகாலக் கடனாகவும் கொடுத்து உதவ வேண்டுமென்றும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், ஷை தீர்மானத்தில் உதவித் தொகையின் அளவைப் பற்றி குறிப்பாக எதுவும் சொல்லவில்லை. ஷை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பொழுதே பஞ்சாயத்து அலுவலகக் கட்டிடங்கள் கட்டுவதற்காக உதவி அளிப்பது குறித்து அரசாங்கம் யோசித்து வந்தது. ஆனால் தேசீய நெருக்கடி நிலைமை காரணமாக அதைத் தள்ளிப்போட வேண்டி வந்தது.

மீன்பிடித் துறைமுகம்

** 688* **கேள்வி—திரு. நா. சௌந்தரபாண்டியன் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள லீபுரத்தை மீன்பிடி துறைமுகமாக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில் அதன் விவரமென்ன ?